**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 140/2020**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆரோக்கியராஜ் | Caste | : |
| Father 's Name | : அந்தோணிசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**12.06.2024**
**முதல் விசாரணை**

நான் விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் இதயம் நல்லெண்ணெய் நிறுவனம் சேலம் கிளையில் பணி செய்து வருகிறேன். கடந்த 17.09.2018 அன்று விருதுநகரில் இருந்து காருக்கு உதிரி பாகங்களை வாங்குவதற்காக காரை திலிபன் என்பவர் காரை ஓட்ட கனிராஜ், மரகதவேல் மற்றும் நானும் சென்று கொண்டிருந்தோம். மதுரை சென்று விட்டு மீண்டும் திரும்பி சிவரக்கோட்டை அருகே வரும் போது நான் தூங்கிவிட்டேன். காரானது மீடியேட்டரில் மோதி நின்றது. எனக்கு கை, கால்களில் சிறு சிறு காயம் ஏற்பட்டு இருந்தது. என்னுடன் வந்தவர்களுக்கும் சிறு காயமும் ஏற்பட்டது. மரகதவேலுக்கு மட்டும் பலத்த காயம் ஏற்பட்டு அவரை மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். சிறிது நேரத்தில் மரகதவேல் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சம்பவத்தின் போது ஆஜர் எதிரி திலிபன் தான் காரை ஓட்டி வந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

சம்பவ தினத்தில் சம்பவ நேரத்தில் சம்பவ யிடத்தில் ஆஜர் எதிரி தான் டிஎன் 67 பி.எப் 5810 என்ற காரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி மரகதவேலின் இறப்பிற்கு காரணமானார் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**